முருகப்பெருமான் துணை

**மகான் சிறப்புலி நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.10.2023**, வியாழக்கிழமை

1. ஆறுமுகனார் சூட்சும வடிவாய்
அவதாரம் புரிந்த அரங்கனே
மாறுதலை பேருலகம் அடைய
மாதருமம் புரியும் தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது துலை திங்கள்
அச்சமற உபய திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 02 ம் நாள், 19.10.2023, வியாழக்கிழமை)
3. வாரமதில் சிறப்புலி நாயனாரும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரமிலா ஞான சபை படைத்து
சுத்தநெறி காட்டும் அரங்கன்
4. அரங்கன் தரும ஞான வழிகளை
அறமான தயவு நெறிகளை
வரங்களாக ஏற்றுப் பணிந்து
வருமுலகில் தொடர்ந்து வணங்கிட
5. வணங்கிட ஞானிகள் காட்டும்
வல்லமையான வழிமுறை விளங்கி
இணங்கி சேவை ஈடுபாட்டுடன்
எல்லா வகையிலும் தேற்றம் தா என
6. தா என வேண்டித் தொடர
தருமபலம் துணையாய் வர
தானென்ற செருக்கு ஒழிந்து
தருமப்படி வாழும் வாழ்க்கையாக

7. ஆகவே மாற்றம் கண்டுமே
அனைவருக்கும் எதிர்காலம் தானும்
மிகையான வளர்ச்சிக் காலமாக
முன்னேற்றம் தனை கண்டடையும்

8. அடையவே தேட்டு தனவளமோடு
ஆன்ம ஞான பலமும் கூடி
தடைகள் என்பதே இல்லாதபடி
தக்க வகை காரிய சித்திகளை

9. சித்திகளை அடைந்து உயர்வர்
சித்தம் தெளிவு கண்டடைய
உத்தமர்களாய் ஞானவான்களாய்
உலகையே மாற்றும் ஞானிகளாய்

10. ஞானிகளாய் சக்தி கூடியே
ஞாலமதில் அற்புதம் படைப்பர்
இனிமைபட அரங்கமகான் வழி
இயம்பிடுவேன் பல சூட்சுமம் அடைந்து

11. அடைந்துமே இலக்கை தருமவழி
அளவிலா வரமாகப் பெற்று
இடரின்றி எதிர்ப்பின்றி வாழ்ந்து
எங்கும் யோகபலன் அடைவர்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—